**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம் - 2022**

---------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஜே.ஆர். ஜயவர்தன நிலையத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிலையத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிலையம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நியைத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிலையத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிலையம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்தல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களி தன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதியில் சீராக்கல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றிற்கான நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றினை நிறுவனத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் தனதாக்கிய நாள் முதல் முதிர்வடைவதற்கு மீதியாகவுள்ள காலம் 3 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான முதலீடுகள், காசுப் பாய்ச்சல் கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 7 நாட்களில் முதிர்வடைவதற்கு உரிய ரூபா 2,000,000 தொகை பெறுமதியான நிலையான வைப்புக்கள் பணம் மற்றும் பணத்துக்கு சமமானவைகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுடன் இணங்குவதுடன், எதிர்காலத்தில் ஏதேனும் முதலீடு ஒன்று 3 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான காலம் போன்ற, குறுகிய முதிர்வடையும் காலத்துடன் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை பணம் மற்றும் பணத்துக்கு சமமானவைகள் என சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ரூபா 46,156,683 தொகை கிரயத்தையுடைய முழுமையாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு மற்றும் 92 ஆம் பந்தியின் பிரகாரம் திறன்மதிப்பு குறிப்பு மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மிகைத்துள்ள தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களின் திறன் மதிப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆண்டின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் மற்றும் 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பேரேட்டுக் கணக்குகளின் படி ஆரம்ப மீதிகளிடையே ரூபா 10,746,757 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசத்திற்காக காரணம் ஆவது பேரேட்டுக் கணக்கில் அடங்கியுள்ள Equipment for Library Automation, Mitsubishi Elevator, Silent Generator, New Pannel Box ஆகிய நிலையான சொத்துக்களுக்குரிய தகவல்கள் மற்றும் மூலப் பதிவேடுகள் கண்டுகொள்ள முடியாமையால் அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு முடியாமல் போனது. | சரியான தகவல்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,484,303 தொகை பெறுமதியான திறைசேரி உண்டியல் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை, கணக்கு குறிப்பு மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களின் மூலம் திறைசேரி உண்டியல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்கு குறிப்புகள் மூலம் திறைசேரி உண்டியல்கள், சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,552,074 தொகை பெறுமதிக்கான கடன்பட்டோர் (கட்டிட வாடகை) மீதியில் அடங்கியுள்ள 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 3,375,791 தொகைக்கான மீதிகளுக்காக ஐயக் கடன் ஒதுக்கத்திற்கு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு இருக்கவில்லை. | 2022 ஆண்டின் போது முன்னைய ஆளுகை சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாமையினால் அந்த கடன்பட்டோர் மீதிக்காக ஐயக் கடன் ஒதுக்குவதற்கு முடியாமல் போனது. எதிர்காலத்தில் ஆளுகை சபைக்கு தகவல்கள் சமர்ப்பிப்பதற்கும் 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர் மீதிகளுக்காக 5% இற்கான ஐயக் கடன் ஒதுக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | ஆளுகை சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு ஐயக் கடன் ஒதுக்குவதற்கு தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பரீட்சை மீதியில் உட்படுத்தப்பட்டுள்ள ரூபா 5,505,805 தொகைக்கான தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக் கணக்கு வரவு மீதி நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | பரீட்சை மீதியில் உட்படுத்தப்பட்டுள்ள Retainig Earning ரூபா 5,505,805 இற்கான பெறுமதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது 2022.12.31 திகதிய நாட்குறிப்பு இலக்கம் 1235 இன் | ஆண்டிற்கான மிகை நாட்குறிப்பு மூலம் சீராக்கல் மேற்கொள்ள தேவைப்படாததுடன் சரியான செய்முறை ஒன்றின் மூலம் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் ஒதுக்கம் மற்றும் இலாபக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அந்த பெறுமதியை சீராக்கல் செய்த பின்னர் இலாபம் மற்றும் ஒதுக்கக் கணக்கு இறுதி மீதியான ரூபா 60,122,948 இற்கான மீதி குறிப்பு இலக்கம் 18 இன் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டது. | வேண்டும். |
| (உ) | நிலையத்தினால் 1998 ஆண்டின் போது ஜே.ஆர். ஜயவர்தன தகவல் நிலையம் என்ற இணைந்த தனியார் கம்பனி ஒன்றில் ரூபா 5,000,000 இற்கான முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2008 ஆண்டின் போது அந்த கம்பனியை மூடியபோது ரூபா 700,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. நிறுவனம் மூடப்பட்டு 14 வருடங்கள் கடந்திருந்ததுடன் தேறப்பட முடியாத ரூபா 4,300,000 இற்கான பெறுமதி நீண்டகால முதலீடு என தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு இருந்தது. தேறப்படாத இந்த முதலீட்டினை நட்டம் ஒன்றென நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு மற்றும் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட J.R. Jayawardana Information Center நிறுவனம் 2008 ஆண்டில் மூடப்பட்டமையால் இந்தத் தொகை அல்லது அதற்காக உரித்தாகிய பங்கிலாபத் தொகை பெற்றுக் கொள்ள முடியாமையால் நீண்டகால முதலீட்டினுள் உட்படுத்தியிருந்த ரூபா 4,300,000 தொகையினை அகற்றுவதற்காக 2015 திசெம்பர் 15 திகதி வழங்கப்பட்டிருந்த ஆளுகை சபையின் அங்கீகாரத்தின் மீது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் திறைசேரியினால் புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது.<br><br>அதன்படி எதிர்காலத்தில் முறையான அங்கீகாரம் ஒன்றுடன் மேற்கூறிய முதலீட்டின் மூலம் நிறுவனத்திற்கு நட்டம் ஏதும் ஏற்பட்டிருந்தால் அந்த நட்டத்தை கணக்குகள் ஊடாக சீராக்கல் மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | தேறப்படாத முதலீடுகள் நட்டம் ஒன்றென நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு மற்றும் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 118,044,033 | விரிவான அட்டவணை | 1978 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு இருக்காமையால் விரிவான அட்டவணை ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனது. | நிதிக் கூற்றுக்களுடன் நிலையான சொத்துக்கள் தொடர்பான விரிவான அட்டவணை ஒன்று சமர்ப்பிப்பதற்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 13(8) | 2021 ஆண்டிற்கான விரிவான கணக்காய்வு அறிக்கை ஆளுகை சபைக்கு சமர்ப்பித்து அல்லது அந்த அறிக்கைக்கான பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | அந்த விரிவான அறிக்கை எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள ஆளுகை சபைக் கூட்டத்தில் ஆளுகை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் II உப பிரிவு 1.6 | நிலையத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | ஒவ்வொரு நிதியாண்டிலும் திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் பண்டக் கணிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் நிலையத்தின் 2022 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு சபை 2023 ஜனவரி 31 திகதியன்றே நியமனம் செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்கப்படுவதுடன் எதிர்காலத்தில் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பண்டக் கணிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 இலக்கங் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | நிலையத்தினால் 2022 ஆண்டிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு இருக்காததுடன், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2021 ஆண்டிற்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடும் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. | பல்வேறு காரணங்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிப்பதற்கு முடியாமல் போனதுடன் தற்போது நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சிய அலுவல்கள் கணக்குப் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ளது. அதே போல் அவர்களினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது என கருணையுடன் அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழிற் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இல் வழிகாட்டல் கோவையின் பந்தி 2.4 | ஆளுகை சபையினால் நிறுவனத்திற்குரிய தொடர்புகள் பற்றி வருடாந்தம் பணிப்பாளர் சபை செயலாளருக்கு அங்கீகரிக்கப்பட்ட படிவத்தின் படி வெளியிடப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பாகவும் வருடாந்த அறிக்கையில் அந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் நிலையத்தினால் 2022 ஆண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைவு வருடாந்த அறிக்கையில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர்கள் தொடர்பாக வருடாந்தம் அறிக்கையில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 2(1) மற்றும் 102 பிரிவுகளின் பிரகாரம் நிலையத்தினால் 2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையாக மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக வருமான வரிக்கான பதிவு செய்வதுக்கு அல்லது வரியிலிருந்து விடுவித்து | நிலையம் ஆரம்பம் முதல் இது வரை வருமான வரி செலுத்தி இருக்காததுடன் நிலையம் இலாபமீட்டும் குறிக்கோளுடன் செயற்படும் நிறுவனம் ஒன்று அல்லாமையால் வருமான வரி செலுத்தப்படாததுடன் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் | வருமான வரிக்காக பதிவு செய்வதற்கு அல்லது வரி விடுதலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்பாக எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கும் திறைசேரியின் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனைகளின் மீது தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,491,805 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,884,169 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 13,375,974 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. கட்டிடட வாடகை வருமானம் ரூபா 1,564,547 தொகையினாலும், நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 8,434,291 தொகையினாலும் மற்றும் மண்டப வாடகை வருமானம் ரூபா 6,609,289 தொகையினாலும் அதிகரித்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்த் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையம் அமைந்துள்ள கொழும்பு 07, தர்மபால மாவத்த 191 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள 3 ரூட் 4.47 பர்சஸ் தொகைக்கான காணி, 1988 ஆண்டின் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதுடன், காணியின் உரிமையை நிலையத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலையத்தின் காணியின் உரிமை தொடர்பாக சிக்கல் தன்மையொன்று காணப்படுகின்றது. அதன் காரணமாக அந்த சிக்கலை எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொண்டேன். | காணியின் உரிமை தொடர்பாக சிக்கல்களை தீர்த்துக் கொண்டு காணியின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 03 திகதி பிணை முறிகள் முதிர்வடையும் போது கிடைத்திருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 13,617,664 தொகைக்கான வட்டித் தொகை உட்பட முதலீடு செய்யப்பட்ட பணத்தை திருப்பிப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான ஆளுகை சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போன காரணத்தினால் 2017 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான 05 ஆண்டு காலப் பகுதிக்காக எதுவித வட்டித் தொகையுமின்றி ரூபா | நிலையத்தினால் 2002 ஆண்டில் இலங்கையின் முக்கியமான வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,725,000 இற்கான தொகை இந்த வங்கி வங்குரோத்து அடைந்திருந்தமையால் இலங்கை மத்திய வங்கியின் கட்டளையின் பிரகாரம் 2007 ஆண்டு திசெம்பர் 03 திகதி முதல் 2017 திசெம்பர் 03 திகதி வரையான 10 வருடங்களில் முதிர்வடையக் கூடிய விதமாக இலங்கை சேமிப்பு வங்கி | ஆளுகை சபையின் அங்கீகாரம் விரைவாக பெற்றுக் கொண்டு முதலீட்டுத் தொகையை திருப்பப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 13,617,664 இற்கான தொகை மாத்திரம் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டிருந்ததுடன் அதன் படி அந்த முதலீட்டுத் தொகைக்காக முன்னர் வழங்கியிருந்த 5% இற்கான வட்டி கிடைத்திருந்தால் அல்லது வேறேதும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்திருந்தால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த ரூபா 2,431,250 இற்கான வட்டித் தொகையொன்றினை நிலையம் இழந்திருந்தது. | பிணை முறியில் முதலீடு செய்யப்பட்டதுடன் அந்த சந்தர்ப்பத்தில் இந்த பிணை முறிக்காக 2007 – 2008 ஆண்டிற்குரிய வட்டி தொகை செலுத்தப்படமாட்டாது என வங்கியினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீதியான 09 வருட காலத்திற்கு உரிய வட்டி வருமானம் வழங்கப்பட்டு இருந்தது. இந்த தொகையை திருப்பி பெற்றுக் கொள்வதற்காக ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆளுகை சபை பத்திரம் மற்றும் உரிய ஆளுகை சபை கூட்ட அறிக்கை இலங்கை சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட வேண்டியிருந்துடன், 2017.12.03 முதல் 2022.12.10 வரை ஆளுகை சபை கூட்டம் ஒன்று ஒழுங்குபடுத்துவதற்கு முடியாமல் போனமையால் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த முதலீட்டுத் தொகை மற்றும் வட்டித் தொகை திருப்பப் பெற்றுக் கொண்டு மீண்டும் முதலீடு செய்வதற்கு இயலாமல் போனது. |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022/23 ஆண்டுகளுக்காக நிலையத்தின் சுத்தப்படுத்தும் சேவை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளில் இரண்டாவது குறைந்த கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த சேவை வழங்கு நிறுவனத்திற்கு ரூபா 99,500 இற்கான மாதாந்த பெறுமதிக்கு ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு பெறுகைக் குழுவினால் 2022 பெப்ரவரி 15 திகதி தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், முதலாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தினால் நிலையத்திற்கு முன்னைய சேவை | 2022/23 ஆண்டுகளுக்கான சுத்தப்படுத்தும் நிறுவனம் ஒன்று தெரிவு செய்வதற்கான விலைகூறல் பரிசோதனை மேற்கொள்ளும் போது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனம் இதற்கு முன்னரும் சேவை வழங்கியிருந்ததுடன் அந்த நிறுவனத்தினால் வழங்கிய சேவை திருப்திகரமற்றது என தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கபட்டிருந்தமையால் | முன்னைய சேவை வழங்கிய நிறுவனத்தின் சேவை திருப்திகரமற்றது என அறிவிக்கப்பட்ட ஆவணங்கள் விலைகூறல் மதிப்பாய்வின் போது விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கிய காலப் பகுதியில் அவர்களின் சேவை திருப்திகரமற்றது என குறிப்பிட்டு அந்த விலைகூறல் மறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் சேவையினை திருப்திகரமற்றது என நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த கடிதம் ஏனும் விலை கூறல் மதிப்பாய்வு செய்யும் போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இரண்டாவது குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு சுத்தப்படுத்தும் பெறுகை வழங்கப்பட்டது. | |
| (ஆ) | ஒப்பந்தம் வழங்குவதற்கு உரிய பெறுகைக் குழுத் தீர்மானம் 2022 பெப்ரவரி மாதம் 15 திகதி வழங்கியிருந்த போதிலும் அத் திகதிக்கு முன்னர் நிலையத்தின் செயலாளர் நாயகத்தினால் குறிப்பிட்ட நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது என இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு அறிவித்திருத்தல், அந்த நிறுவனத்துடன் எழுத்துமூல உடன்படிக்கைக்கு அணுகுதல், செயலாற்றுகை பிணை முறி மற்றும் ஏனைய நிபந்தனைகள் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவித்து மீண்டும் கடிதம் ஒன்று அனுப்புதல் ஆகிய கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், 2022 பெப்ரவரி 01 திகதி அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் நிலையத்தின் சுத்தப்படுத்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி செயலாளர் நாயகத்தினால் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டிருந்தார் என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2, 2.7.5, 2.14.1, 6.2.2, 7.9.1 மற்றும் 7.9.11 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக சுத்தப்படுத்தும் சேவை பெற்றுக் கொள்ளும் பெறுகை கருமங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2, 2.7.5, 2.14.1, 6.2.2, 7.9.1 மற்றும் 7.9.11 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றிக்கை இலக்கம் 01/2021 இன் செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 இன் படி வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள், கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிலையத்தினால் 2022 ஆண்டிற்கான கணக்குகள் 2023 மே 19 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களுக்காக ஆளுகை சபையின் அங்கீகாரம் பெறுவதில் தாமதம் அடைந்ததால் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாமல் போனது. எதிர்காலத்தில் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தினத்தில் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆவது பிரிவின் பிரகாரம் நிலையத்தினால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2022 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் பிரகாரம் நிலையத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை. | 2022 ஆண்டின் 04 காலாண்டுகளுக்காக புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுக் கூட்டங்களுக்காக குறிப்பிட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில் வழங்கப்பட்டது. அதே போல் அந்த குழு கூட்டங்களில் உதவி கணக்காளர் பங்குபற்றினார். | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |